03.08.2026.

O.S.No. 28/2022

DW1– மாரியப்பன்– த/பெ. குத்தாலிங்கம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.08.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. வாதி எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். வழக்குச்சொத்தின் வடபக்கமுள்ள வீட்டில் எனது பெற்றோர் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2. வழக்குச்சொத்துக்களை நானும், எனது தாயரும் 2003 ம் ஆண்டு கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். 2003 ம் ஆண்டே கிரையம் வாங்கியவுடனே எனது சொத்திற்கு வடக்குப்பக்கம் வீடுகட்டிவிட்டார் என்றால் சரிதான். எனக்கு முன்பே வாதி வீடுகட்டிவிட்டார் என்றால் சரியல்ல, நான் வீடுகட்டி 2 ஆண்டுகள் கழித்துதான் வீடுகட்டினார். நான் இடம் வாங்கி 2 ஆண்டுகள் கழித்துதான் வீடுகட்டினேன். எனது சொத்திற்கு வடபக்கம் உள்ள வீட்டினை கட்டும்போது எனது இடத்திற்கு கீழ்பக்கம் அமைந்துள்ள தென்வடல் பொதுப்பாதையை புழங்கிதான் வீடுகட்டினார் என்றால் சரிதான்.

3. நானோ, எனது மனைவியோ வாதியின் மீது எந்த உரிமையியல் வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் வீடுகட்டும் சமயத்தில் வாதி தான் என்னுடன் பிரச்சனை செய்தார், அதனால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் தொடர்பாக எனக்கும், வாதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால் சரியல்ல.

4. எனது எதிருரை மற்றும் முதல்விசாரணை வாக்குமலத்தில் நானும், வாதியும் சமாதானமாக உள்ளோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, வாதிக்கும், எனக்கும் பேச்சுவார்த்தை கிடையாது.

5. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு தான் தபசில் சொத்துக்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் வா.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் வலதுபக்கமாக உள்ள நடைபாதை தான் பொதுநடைபாதை என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் பூசாமல் உள்ளது எனது வீடு. அது தெற்குபக்கம் பார்த்துள்ளது, மேற்படி பொதுமுடுக்கு கிழக்குபக்கம் உள்ளது.

7. மேற்படி புகைப்படத்தில் சன்சேடு அமைப்பதற்காகதான் கம்பிகள் வெளியே நீட்டியுள்ளது என்றால் வாதிக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்படவும் சன்சேடு அமைப்பதை நிறுத்துவிட்டேன், மேற்படி கம்பிகளையும் வளைத்துவிட்டேன். நான் இந்த வழக்கில் இடைக்கால தடையுத்தரவு இருப்பதால்தான் கட்டிடம் கட்டவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் வாதிக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தவிவரம் ஏற்படும் போதே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு தெரியாது.

8. எனது எதிருரையில் சொல்லியுள்ளாவறு சமரசபேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் எண்.9 மற்றும் 10ல் கீழ்பக்க நடைபாதை பொதுநடைபாதையாக

காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி நான் பொதுநடைபாதையை ஆக்கிரமிக்கக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், நான் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. நான் 2022 ல் பழையவீட்டை இடித்து புது வீடுகட்டினேன் என்றால் சரிதான். நான் சிலாப் அமைக்க முயற்சி செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் எப்போதும் பொதுநடைபாதையில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யமாட்டேன், அது பொதுநடைபாதை என்பதால் பூசி வெள்ளையடிக்க மட்டும் தான் பயன்படுத்துவேன். வாதி 2014 லிருந்து பிராதுதபசில் சொத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். வாதி என் மீது வம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/– K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**